The above details help us to see the controversy about Dhruva being the ancient Pole Star from a different perspective. The arguments for and against Dhruva being the Pole Star during the Vedic times have been succinctly presented by Law in his book on the age of the Ṛgveda.[13] Jacobi somehow referred only to the late marriage codes for presenting his case. His opponents prejudiced as they were against dating the *Ṛgveda* to any period before 1500 BC. treated Dhruva as an independent entity mentioned only in the *Gṛhya Sūtra* without any connection to the Vedic *Śiśumāra*. Typical was the dismissal by Whitney[14] when he wrote "… .any star not too distant from the pole would have satisfied both the newly wedded woman and the exhibitor; there is no need of assuming that the custom is one handed down from the remote period when ∝-Draconis was really very close to the pole, across an interval of two or three thousand years during which there is no mention of pole-star, either in Veda or in Brāhmaṇa." Keith[15] who translated several Vedic texts working in the Colonial Office, was derisive of the Hindu marriage ritual and commented "…the argument from the pole star assumes an accuracy in the demands of the primitive Indian wedding ritual which is wholly unnatural." While criticizing the *Satapatha Brāhmaṇa* text mentioning that the Pleiades do not slip from the east he wrote "a passage which consists of foolish reasons for preferring one or other of the *nakṣatras*; we are in the same region of popular belief as when in the Sūtra literature the existence of Dhruva, a fixed polar star, is alleged." He added a foot note, as though not satisfied with his arguments (p 79); "The pole star, Dhruva, appears in the *Gṛhya Sūtras* only." Whitney and Keith were obviously ignorant of the *Taittirīya Āraṇyaka* text as the basis for the Vedic statements implying the existence of Abhaya-Dhruva on the tail of the Draco and the *Ekāgni* text as the traceable Vedic source for the Hindu marriage rites. These texts could not have been as late as the sutra literature generally assigned to c 500 BC. Another influential scholar of yesteryears. Winternitz[16] ignored the

evidences in the *Br.P* and the *TA* to comment "...We cannot deny the possibility of one of the lesser stars in the Little Bear having been visible (about 1250 BC and even later still) as the Pole Star in the clear Indian firmament.- It remains a puzzle why he ignored the constraint of Dhruva being said to be along with thirteen other stars on the body of a figure looking like a dolphin. If some scholars thought that the Little Bear was part of the tail of the ancient śiśumāra constellation they should have presented hard evidences from the Vedic and Purāṇa texts to support their beliefs.

The above discussion brings out that there are sufficient positive evidences in the ancient Sanskrit texts to identify the Hindu Dhruva with the star Thuban. Knowledge of Dhruva as an immovable star located on the śiśumāra either by direct observation or as part of traditional wisdom passed on from the past is well preserved in the Vedic *Taittirīya Āraṇyaka* and Ekāgni texts. The absence of reference to a fixed north star in the Ṛgveda does not vitiate the above inference. In fact this points to the still more ancient nature of the *Ṛgveda Sumhitā*. To discuss whether this can be a method for dating the Vedic compositions is beyond the scope of the present work. We have to accept, at the least minimum, that votaries of a particular Vedic group in India beheld and preserved a sky picture of a dolphin like figure with fourteen stars. the last star on the tail looking fixed without any observable motion with respect to other stars, some time in the 4th millennium BC.

Purāṇas basically claim to present ancient legends. Hence such textual parts of the *Br. P* referring to the *Śiśumāra* need not be dated as being very ancient. This point necessitates another look at the identity of Dhruva. Is it possible the *Br.P* took some star other than ∝-Draconis as the self rotating Dhruva, which could have been still lying on the extended tail of the constellation? Such a possibility cannot be denied, since *Br.P* can be interpreted to state 15 stars, by counting Mārīca and Kaśyapa separately, on the body of the Dolphin. The only eligible candidate for this possible alternate

Purāṇic identification of Dhruva is κ-Draconis. which was nearest to the NCP in 1300 BC with declination 85°13'. This possibility does not in any way affect the conclusions about Dhruva being known as a fixed star in the Vedic period.

Conclusion

Any attempt to trace the history of Indian astronomy can not overlook the Purāṇas and the vast Vedic literature starting from the *Ṛgveda*. The identification and constraints for locating Dhruva. the ancient Pole Star, as vividly described in the *Brahmāṇḍa Purāṇa* and the more ancient *Taittirīya Āraṇyaka* of the *yajurveda* are presented in this article. The latter text presents the oldest description of a constellation comprising of fourteen stars lying in the sky named the śiśumāra or the Dolphin. The *Paṇcaviṃśa Brāhmaṇa* mentions this Dolphin as being helpful in navigating oceans which naturally should be an allusion to the circumpolar nature of the stars of this constellation. Textual evidences show that the original name for Dhruva was Abhaya configured to be eated at the tail end of the celestial Dolphin. Long before the *Gṛhya Sūtra* literature that indologists used as the source to prove the alleged lateness of the concept of Dhruva the Pole Star in India. the *Taittirīya Āraṇyaka* had a hymn equating Abhaya and Dhruva. none other than the star ∝-Draconis (Thuban) that was nearest to the North Celestial Pole during the period 3200-2400 BC.

Acknowledgement

Discussions with V.H.Sateeshkumar, Baylor University, USA were helpful. Thanks are due to Vishal Agarwal for sending the Sanskrit commentaries on the *Taittirīya Āraṇyaka*.

Notes

1. P.N. Shankar (1984). *A Guide to the Night Sky*, KRVP. Bangalore
2. H.G. Jacobi (1894) On the date of the *Ṛgveda*. (Transl. from German) *The Indian Antiquary*, 23, 154-159.

3. W.E. Clarke (1923) A note on Pargiter's Ancient Indian Historical Tradition, *J Am.Oriental Soc.* 43,130-131

4. R.N. Iyengar (2005) Eclipse Period Number 3339 in the *Ṛgveda*. IJHS, 40.2, 139-152.

5. T.S.K. Sastry (1984) (Ed.) *Vedāṅga Jyautiṣa of Lagadha, IJHS*, 19.4. Supplement, 1-74.

6. R.N. Iyengar (2006) Some Celestial Observations Associated with Kṛṣṇa-Lore, *IJHS* 41.1. 1-13.

7. K.D. Abhyankar (2006) Dhruvaka-vikshepa system of Astronomical Coordinates, *IJHS* 41.2, 151-157.

8. W. Caland (1931) *English Translation* of the Paṇcavimśa-Brāhmaṇa, Bibliotheca Indica Series, 255, Calcutta.

9. R.H. Allen (1963) *Star Names and Their Meanings*, Dover Publns. Inc., USA.

10. The Matsya Purāṇa (Text and Transl. 1997) Arranged by N.S. Singh, Foreword by H.H. Wilson, Nag Publ. Delhi,

11 M.N. Dutt (1972) *English Translation* of the *Viṣṇu Purāṇa*, Chowkamba Publ. Varanasi.

12. G.V. Tagare (2000) *English Translation* of the *Brahmāṇṇḍa Purāṇa*. Motilal Banarsidas Publn., N.Delhi.

13. N.N. Law (1965) *Age of the Ṛgveda*, Firma K.L. Mukhopadhyay, Calcutta.

14. W.D. Whitney (1985) On a recent attempt by Jacobi and Tilak to determine on Astronomical Evidence the Date of the earliest Vedic Period as 4000 BC. *The Indian Antiquary*, 24, 361-369

15. B.Keith (1925) *The Religion and Philosophy of the Veda and Upanishads* Harvard Univ. Press, USA.

16. M. Winternitz (1927) *A History of Indian Literature*, (Transl. from German) Reprint, Motilal Banarsidas Publn. N.Delhi

திருமுக்கூடல் கல்வெட்டுகள் காட்டும் வழிபாடுகள், திருவிழாக்கள்

2

இரா. சிவானந்தம்
கல்வெட்டாய்வாளர்

திருமுக்கூடல் கோயிலில் பல்லவர் சோழர், விஜயநகரர், செஞ்சி நாயக்கர் காலக் கல்வெட்டுகள் ஆக மொத்தம் 22 கல்வெட்டுகள் காணப்படுகின்றன.[1] இங்குள்ள கல்வெட்டுகளில் காலத்தால் முந்தையது பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மன் 24-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும்.[2] இதனின் காலம் கி.பி. 893-ஆம் ஆண்டாகும். இக்கல்வெட்டு கோயில் கருவறை, சுவர்களில் அல்லாமல் தனிக்கல்லாகக் கிடைக்கின்றது. இக்கோயில் கருவறைச் சுவரில் முதலாம் இராசராசனின் 28-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுகள் இரண்டு காணப்படுகின்றன.[3] இக்கல்வெட்டுகளே, இங்குள்ள சோழர் காலக் கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டவை.

கோயிலின் காலம்

இக்கோயில் 108 வைணவத்தலங்களில் ஒன்று. ஆழ்வார்களால் பாடப்பெற்றத் தலமாகும். ஆகவே இக்கோயில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதல் வழிபாட்டில் இருந்து வருகின்றதை அறிகிறோம். பல்லவர் காலக் கல்வெட்டான நிருபதுங்கனின் கல்வெட்டில் இக்கோயில் இறைவன் விஷ்ணுபடாரர்க்கு நந்தா விளக்கெரிக்க தானமளிக்கப்பட்டுள்ளச் செய்தியைக் கூறுகிறது.[4] பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்டக் கோயில் செங்கல் சுதை கொண்டு கட்டப்பட்டிருக்கவேண்டும். ஆதலால், கொடையளிக்கப்பட்ட கல்வெட்டு பலகைக்கல்லில் செதுக்கப்பட்டு நடப்பட்டிருக்க வேண்டும். கோயில் கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபம் முதலியன சோழர்காலக் கட்டட அமைதியில் அமைந்துள்ளன. இங்கு வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுகளில் மிகப்பழமையானது முதலாம் இராசராசனின் கல்வெட்டுகள் ஆகும். எனவே, முதலாம் இராசராசனின் காலத்தில்தான் இக்கோயில் கற்றளியாக எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இக்கோயில் திருச்சுற்று மாளிகை, ஜனநாதன் மண்டபம் ஆகியவற்றினை வைசியன் மாதவன் தாமயன் என்பவன் எடுத்துள்ளதை வீரராஜேந்திரனின் 5-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1068) கல்வெட்டு பகர்கின்றது.[5] இதே கல்வெட்டில் 'இந்த தன்மம் செய்வித்த தாமயனார் மகன் தாமயன் கங்கை கொண்ட சோழனான சேனாபதிகள் கங்கை கொண்ட சோழ தன்ம பாலர்க்கும்' என்ற குறிப்பால் இவனது மகனைப் பற்றியக் குறிப்பும் கிடைக்கின்றது.[6]

முதலாம் இராசேந்திரனின் படைத்தளபதியாக இருந்து கங்கை வெற்றியின் போது உடனிருந்தவன் என்பதனை 'சேனாதிபதிகள் கங்கைகொண்ட சோழ தன்ம பாலர்' என்ற குறிப்பு உணர்த்துகிறது. எனவே இவன் முதலாம் இராசேந்திரன் ஆட்சிக்காலத்திலிருந்து வீரராஜேந்திரன் காலம் வரை படைத்தளபதியாக இருந்துவந்துள்ளான். இவனது தந்தையான 'வைசியன் மாதவன் தாமயன்' இராசராசனின் காலத்தைச் சார்ந்தவன் என்பதைக் குறிப்பிடுவதில் தவறிருக்காது. இவன் எடுப்பித்த 'சனநாதன் மண்டபம்' என்பது முதலாம் இராசராசனின் பட்டப்பெயர்களில் ஒன்றான 'சனநாதன்' பெயரினால் எடுத்துள்ளான் என்பதை நன்கறியமுடிகிறது. எனவே இக்கோயில் முதலாம் இராசராசனின் காலத்தில்தான் எடுக்கப்பட்டவை என்பதற்கு இச்சான்றுகள் மேலும் வலுவூட்டுகின்றன.

இறைவன் பெயர்

திருமுக்கூடல் கோயிலில் காணப்படுகின்ற கல்வெட்டுகளில் காலத்தால் மிகப்பழமையானதான பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மனின் 24-ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி.893) கல்வெட்டில் இக்கோயில் இறைவன் 'விஷ்ணு படாரர்' என்று அழைக்கப்பட்டுள்ளார்.[7] அதன்பின்னர், சோழர் காலத்தில் 'திருமுக்கூடல் ஆழ்வார்' 'திருமுக்கூடல் மகாவிஷ்ணு' என்று இவ்வூரினை முன்ஒட்டாகக் கொண்டு திருமால் அழைக்கப்பட்டுள்ளார்.[8]

சோழர் காலத்தை அடுத்துவந்த விஜயநகரர் காலத்தில் வீரபுக்கண உடையார் (கி.பி. 1356-77) கல்வெட்டு 'திருவேங்கடமுடையான்' என வேங்கட மலையில் வீற்றிருக்கும் வேங்கடவன் பெயரால் 'திருவேங்கடமுடையான்'[9] என விளிக்கப்பட்டுள்ளான். அதனையடுத்து செஞ்சி நாயக்கர் கால கல்வெட்டொன்று இவ்விறைவனை 'ஸ்ரீவெங்கடேசுவர சுவாமி' என்று பகர்கிறது.[10] இப்பெயர் வேங்கட ஈஸ்வர சுவாமி என்று திருமலை வேங்கடவன் பெயராலேயே அழைக்கப்பட்டுள்ளதை எளிதில் விளங்கலாம். இப்பெயரிலேயே இக்கோயில் திருமால் 'வெங்கடேசுவர பெருமாள்' என்று பொதுமக்களால் தற்போது அழைக்கப்படுகிறார்.

பல்லவர் காலத்தில் 'விஷ்ணு படாரர்' என்றும் சோழர் ஆட்சியில் 'திருமுக்கூடல் ஆழ்வார்', 'திருமுக்கூடல் மகாவிஷ்ணு' என்றும் விஜயநகரர் ஆளுகையில் 'திருவேங்கடமுடையான்' எனவும்; வெங்கடப்ப நாயக்கன் காலத்தில் 'ஸ்ரீவெங்கடேசுவர சுவாமி' என்றும் அழைத்தள்ளதிலிருந்து கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டில்தான் 'ஸ்ரீவெங்கடேசுவர பெருமாள்' என்று இக்கோயில் இறைவனுக்குப் பெயர் மாற்றம் நடந்துள்ளதை விளங்கமுடிகிறது.

இக்கோயிலில் உள்ள சோழர்காலக் கல்வெட்டுகள்தான் இக்கோயிலில் நடைபெற்ற வழிபாடுகள், மாதத் திருவிழாக்கள், ஆண்டுத் திருவிழாக்கள், மன்னனின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் என்று பல விழாக்கள் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றன. சோழர் காலத்தில் இக்கோயிலில் நடைபெற்ற வழிபாடு, திருவிழா, சிறப்புத் திருநாள் பற்றியும், இறைவனுக்குப் படைக்க அளிக்கப்பட்ட அமுதுபடிகள்; அதன் அளவு, என்னென்ன வகையான உணவுகள் படைக்கப்பட்டன என்பன பற்றி விரிவாகக் காண்போம்.[11]

வழிபாடுகள்

திருமுக்கூடல் ஆழ்வார் கோயில் தினசரி வழிபாடுகள்

சந்தனக்காப்பு செய்திட நாள் ஒன்றுக்கு அரைப்பலம் சந்தணம், கற்பூரம் 5 மா அளவு, குங்குமம், இரண்டு நுந்தா விளக்கெரிக்க நாள் ஒன்றுக்கு உரி அளவு எண்ணெய், திருச்சுற்று மாளிகையில் இரவு முழுவதும் 3 விளக்கெரிக்க உழக்கு ஆழாக்கு அளவு எண்ணெய், கோயிலில் சந்தி விளக்கு 10 விளக்கு எரிக்க நாள் ஒன்றுக்கு நாழி உழக்கு வீதம் 360 நாட்களுக்கு 152 நாழி ஓர் உரி எண்ணெய் வழங்கியுள்ளனர்.

தினசரி வழிபாடு

இக்கோயிலில் பூசை செய்யும் வைணவர்கள், கோயில் பண்டாரத்திலிருந்து 30 பொன் பெற்றுக்கொண்டு தினசரி உணவு படைக்க, பெருங்குறிசபையார் ஏற்பாடு செய்துள்ளனர் என்பதினை முதலாம் இராசராசனின் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[12]

இறைவனுக்குப் படைக்கப்பட்ட இவ்வுணவானது; பூரிக்குத்தல் அரிசி 3 குறுணி, பருப்பு ஓர் ஆழாக்கு, மூன்று காய்கறிகள், பொறிக்கறி, தயிர் ஆகியவைவயைக் கொண்டதாகும். உணவு சமைப்பதற்கு ஒரு கட்டு விறகு, வழிபாட்டிற்கு வெற்றிலை ஓர் அடுக்கு மற்றும் 4 பாக்குகள் ஆகியனவும்

வழங்கிட வழிவகைச் செய்துள்ளனர். இக்கோயிலில் பூசை செய்யும் வைணவர்களை 'ஆழ்வார் உபாசகர்' என்று கல்வெட்டுகள் சுட்டுகின்றன.[13] இம்மன்னனது மற்றொரு கல்வெட்டு, இக்கோயில் வழிபாட்டிற்கு நிலம் அளித்தச் செய்தியைத் தெரிவிக்கின்றது.[14]

சிறுகாலைச்சந்தி

திருமுக்கூடல் ஆழ்வார்க்கு சிறுகாலைச் சந்தி வழிபாட்டின்போது பருப்புப் போனகம் வைத்துப் படைக்கப்பட்டுள்ளது.[15] இப்பருப்பு போனகத்துக்குத் தேவையானப் பொருட்களும் அதனின் அளவுகளும் சொல்லப்பட்டுள்ளன. அரிசி குறுணி, நான்கு நாழி பருப்புக்கு குறுணி பயறு, புழுக்குக்கறியமுது ஒன்றும், ஆழாக்கு நெய், ஆழாக்கு உப்பு, அடைக்காயமுது (பாக்கு) - 5, வெற்றிலை-20 ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன. மேலுள்ள பொருட்களைக் கொண்டு பருப்பு அமுதும், ஒரு கறிவகையும், தாம்பூலத்திற்கு ஐந்து பாக்குகள் மற்றும் இருபது வெற்றிலைகளும் அளிக்கப்பட்டுள்ளன.

உச்சிச்சந்தி

உச்சி வேளை வழிபாட்டின்போது அக்காரடலை போனகம் (சர்க்கரைப் பொங்கல்) வைத்து வழிபாடு நடத்தியுள்ளனர்.[16] இந்த அக்காரடலை என்னும் சர்க்கரைப் பொங்கலுக்கு, நான்கு நாழி அரிசி, ஆறு நாழி பால், நாழி நெய், சர்க்கரை 32 பலம், மேலும் எட்டு வாழைப்பழம், ஐந்து பாக்கு, இருபது வெற்றிலை போன்றவை வழிபாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன. அரிசி, பால், நெய், சற்கரை (வெல்லம்) ஆகியவற்றினைக் கொண்டு இச்சக்கரைப் பொங்கல் செய்தளிக்கப்பட்டுள்ளது.

இரவு சந்தி

இக்கோயில் ஆழ்வாரின் இரவு வழிபாட்டின்போது பால் போனகம் படைக்கப்பட்டுள்ளது.[17] பால் போனகம் என்பது பால் சோறு ஆகும். அரிசி நான்கு நாழி அளவு, பால் நான்கு நாழி அளவு கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பால் சோறுக்கு தொடுகறியும் செய்யப்பட்டுள்ளது; அதற்கு ஏதேனும் ஒரு காய்கறி, நெய் ஆழாக்கு அளவு தந்துள்ளனர். பாக்கு-5, வெற்றிலை-20 ஆகியன வழிபாட்டிற்காகக் கொடுத்துள்ளனர்.

அமாவாசை வழிபாடு

திருமுக்கூடல் கோயிலில் ஒவ்வொரு அமாவாசை தினத்தன்றும் சோழர் காலத்தில் சிறப்பாக வழிபாடு நடைபெற்றுள்ளன. அமாவாசையன்று இறைவன்

தீர்த்தமாடி, திருவீதியுலாவும் வந்துள்ளார். திருமுக்கூடல் ஆழ்வார்க்கு மட்டுமின்றி இவரது அடியார்களான கருடதேவர், சேனாபதியார், சக்கரத்தாழ்வார் ஆகியோருக்கும் அன்று வழிபாடு நடத்தப்பெற்றுள்ளது. திருமுக்கூடல் ஆழ்வார்க்கு 4 நாழி அளவும்; மற்ற மூவருக்கும் தலா இரு நாழி அரிசி கொண்டும் உணவு செய்து வழிபாடு செய்யப்பட்டுள்ளதை முதலாம் இராசேந்திரனின் 4-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[18]

அமாவாசை தினத்தன்று நெல் பரப்பி கலசம் வைத்து, நெய் விளக்கிட்டு, பால், மஞ்சள் கொண்டு பூசை செய்துள்ளனர். அன்று இறைவனை திருப்பள்ளிச் சிவிகையில் வைத்துத் தூக்கி வந்துள்ளனர். இச்சிவிகையைத் தூக்கி வந்த 4 பேர்களுக்கு நான்கு நாழி நெல் கூலியாகத் தரப்பட்டுள்ளது. ஒரு அமாவாசை வழிபாட்டிற்கு 10 காடி வீதம், ஓர் ஆண்டு 12 அமாவாசைக்கும் 120 காடி நெல் வழங்கப்பட்டுள்ளது.[19]

அமாவாசை தின வழிபாட்டுத் தேவைகளுக்காக ஓர் ஊர் ஒன்றினையேத் தானமாக அளித்துள்ளனர் ஊர்ச் சபையினர். அதாவது 'வைப்பூர்' என்ற ஊரில் இருந்த அதிகாரிகள் தங்கள் நிலத்திலிருந்து 120 காடி நெல்லினைக் கோயிலுக்கு அளந்து வந்தனர். அந்த 120 காடி நெல்லினை ஒவ்வொரு அமாவாசை தினத்தன்றும் வழிபாட்டுச் செலவுக்காகப் பயன்படுத்திக்கொள்ள ஏற்பாடு செய்துள்ளனர்.[20] (30/98)

ஒவ்வொரு அமாவாசையன்றும் சிறப்பாக வழிபாடுகள் நடைபெற்றன. இறைவன் தீர்த்தம் ஆடி வழிபாடுச் செய்துள்ளனர். அமாவாசையன்று வழிபாடு செய்யவரும் 20 வைணவர்களுக்கு உணவளிக்க வழிவகைச் செய்துள்ளனர். ஆள் ஒருவருக்கு 1 நாழி அரிசி வீதம் உணவளித்துள்ளனர் அரிசி சோறு, புழுக்குக்கறி (கூட்டு), மிளகு கறி, புளித்தகறி (புளிக்குழும்பு), இலைக்கறி (கீரை) ஆகிய உணவுகள் பரிமாறப்பட்டிருக்க வேண்டும்.[21]

திருவிழாச் சதுரம்

திருமுக்கூடல் ஆழ்வார்க் கோயிலில் நடைபெறும் திருவிழாத் தேவைகளுக்காக சில ஊர்களின் நிலங்கள் 'திருவிழாச் சதுரம்' என்ற பெயரில் வழங்கப்பெற்றன.[22] அவ்வாறு திருவிழாச் சதுரமாக வழங்கப்பட்ட நிலங்களைக் கொண்ட ஊர்கள் பிணாயூர்,[23] வைப்பூர்[24] ஆகியன.

அரும்புலியூர் அருகே அமைந்திருந்த 'பிணாயூர்' என்கிற கிராமத்தினர் அவ்வூர் விளைநிலங்களில் எட்டுப்படாகம் அளவு நிலத்தில் உழுது அதன் வழி வழியாக 120 காடி நெல் கோயிலுக்கு அளித்து வந்தனர். அந்நெல் புரட்டாசித் திருநாள் வழிபாட்டுச் செலவுகளுக்காக அளிக்கப்பட்டுள்ளது.

சோழர் காலத்தில் ஒவ்வொருத் துறையிலும் வல்லமையும், நிபுணத்துவமும் கொண்டவர்களுக்கு பட்டங்கள் அளிப்பது வழக்கம். வாத்தியங்கள் வாசிப்பதில் நன்கு தேர்ச்சி பெற்ற வல்லவர்களுக்கு 'வாத்திய மாராயன்' என்ற பட்டம் அளித்துள்ளனர். அவர்களுக்குச் சிறப்பு செய்வதற்கு நிலங்கள் அளிக்கப்படுவது சோழர்கால வழக்கமாக இருந்துள்ளது. இதுபோன்று இப்பகுதியில் வாத்தியங்கள் வாசித்து மீட்டுவதில் வல்லவன் ஒருவன் இருந்துள்ளான். அவனது பெயர் 'இராஜராஜ வாத்திய மாராயன்' என்பதாகும். அவ்வாறு அவனுக்கு அளிக்கப்பட்ட நிலங்களிலிருந்து வந்த நெல்லின் ஒரு பகுதியான 150 காடி நெல்லினை ஐப்பசித் திருநாளுக்கு வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.[25] இதன் வாயிலாக ஐப்பசி மாதத்திருவிழா சிறப்புடன் நடைபெற்றுள்ளதை விளங்கமுடிகிறது.

அதேபோன்று மாதந்தோறும் வரும் அமாவாசை தினத்தன்று வழிபாட்டுச் செலவுகளுக்காக 'வைப்பூர்' என்ற ஊரில் இருந்த திருவிழாச்சதுர நிலத்திலிருந்து 120 காடி நெல் பயன்படுத்தப்பட்டுள்ளதை ஏற்கனவே பார்த்தோம்.

ஐப்பசித் திருநாள்

ஐப்பசி மாதத்தில் ஏழு நாள் திருவிழா நடைபெற்றுள்ளது.[26] ஒருபொழுதுக்கு அமுதுபடி பதக்கு அளவு அரிசி, உரி அளவு பருப்புக்கு நாழி அளவு பயறு கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. பொரிக்கறி (பொறியல்), புழுக்குக்கறி (கூட்டு), இதற்கான காய்கறிகள், மிளகு, உப்பு ஆகியவை தரப்பட்டுள்ளன. ஐப்பசி மாத்தில் நடைபெற்ற ஏழுநாளில் ஆழ்வார் 12 முறை எழுந்தருளியுள்ளார்.

அதாவது முதல் மற்றும் கடைசி நாட்களில் ஒரு முறையும், இடைப்பட்ட ஐந்து நாட்களில் தினமும் இருமுறை இறைவன் எழுந்தருளியிருக்க வேண்டும். அதில் ஆறு நாட்கள் திருவிழாவாகவும், ஒரு நாள் தீர்த்தமாடும் நாளாகவும்

கொண்டாடியுள்ளனர். அந்த ஆறு திருவிழா நாட்களில் நாள் ஒன்றில் 25 வைணவர்கள் உணவு உண்ணவும்; ஆக ஆறு நாட்களில் 150 வைணவர்கள் உணவு உண்பதற்கு ஏற்ற வகையில் தானமளித்துள்ளனர். தீர்த்தமாடும் அன்று மட்டும் 50 பேர்களுக்கு உணவளித்துள்ளனர்.

மாசித்திருநாள்

மாசிமகம்

இவ்வூர்க் கல்வெட்டுகளில் திருவிழாப் பற்றித் தெரிவிக்கும் முதல் கல்வெட்டு, முதலாம் இராசராசனின் இறப்பிற்கு அடுத்த ஆண்டான அவனது மகன் முதலாம் இராசேந்திரனின் 3–ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டே ஆகும்.[27] இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் விழா 'மாசி மகம்' திருவிழாவாகும். மாசி மகம் நாளன்று இறைவன் தீர்த்தமாடிய பின் நடைபெறும் வழிபாட்டின்போது உணவு படைக்கப்பட்டுள்ளச் செய்தி தெரியவருகிறது. இதுபோன்று ஒவ்வொரு 'மாசிமகம்' திருநாளிலும் உணவு படைக்க 3 கழஞ்சுப் பொன்னினை மூலதனமாகக் கொண்டு நடந்திட பிணிக்குப்புறத்து நாராயண கிரமவித்தன் என்பான் அளித்துள்ளான்.

இவ்வுணவு நான்கு காடி அரிசி, காய்கறி, புளி, நெய், தயிர் ஆகியவற்றைக் கொண்டதாகும். இவ்வுணவு செய்யப் பயன்படுத்தப்படும் மண்பாத்திரங்களை செய்தளிக்கும் குயவனுக்கு, குறுணி அளவு நெல் கூலியாக வழுங்கப்பட்டுள்ளது.

மாசித்திருநாள் விழாவும் ஏழு நாட்கள் நடைபெற்றுள்ளது. பன்னிரண்டு பொழுது இறைவன் எழுந்தருளும் போது திருவமுது செய்தருள ஏழு கலம் நெல் கொடுக்கப்பட்டுள்ளது.[28]

மாசி மாதம் மகம் நாளன்று. ஜனநாதன் மண்டபத்தில் 200 வைணவர்களுக்கு உணவளித்துள்ளனர் அன்று இறைவனைப் போற்றி 'திருவாய்மொழி' பாடுவதற்கு இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தலா முக்குறுணி நெல்லும், இரண்டு காசுகளும் வழங்கியுள்ளனர்.[29]

திருவேட்டை

'ஐப்பசித்திருநாள்', 'மாசித்திருநாள்' ஆகிய இரு திருவிழாக்களும் ஏழு நாட்கள் நடைபெற்றுள்ளன. இவ்விரு திருவிழாக்களின்போது 'வீரசோழன் திருநந்தவனத்தில்' திருவேட்டை நிகழ்வுக்காக இறைவன் எழுந்தருளியுள்ளார்.[30] அப்பொழுது, இறைவனுக்கு உணவு படைக்கப்பட்டது. அத்திருவமுது

'பெருந்திருவமுது' என்றழைக்கப்பட்டது. இப்பெருந்திருவமுதுக்கு ஒரு கலம் அரிசி, இரண்டு நாழி பருப்புக்கு நான்கு நாழி பயறு, பொரிக்கறி அமுது ஒன்று, புழுக்குக்கறி அமுது ஒன்று, மிளகுகறியமுதுக்கு மிளகு ஆழாக்கு, உப்பு இரு நாழி அளவு, நெய் நாழி அளவு, தயிர் குறுணி அளவு பயன்படுத்தப் பட்டுள்ளது. இதனைக்கொண்டு பருப்புச்சோறு, சாம்பார் சோறு, மிளகுச் சோறு, தயிர்ச்சோறு ஆகியன தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை உணரலாம். இத்திருவேட்டைத் திருநாள் ஒரு நாள் மட்டும் நடைபெற்றுள்ளது. இது ஏழு நாட்களில் எந்த நாளில் நடைபெற்றது என்ற குறிப்பு இல்லை,

கார்த்திகைத் திருநாள்

கார்த்திகைத் திருநாள் என்பது கார்த்திகை மாதம் கார்த்திகை நாளன்று கொண்டாடப்படுவதாகும். இத்திருநாள் பண்டைக்காலம் முதல் நடைபெற்று வருகிறது. இக்கோயிலில் கார்த்திகைத் திருநாள் வெகுச்சிறப்பாக நடைபெற்றுள்ளதை கல்வெட்டு ஒன்றின் வாயிலாக அறியமுடிகிறது. கோயில் திருவுண்ணாழிகை (கருவறை), திருச்சுற்று மாளிகை ஆகியவற்றில் இரவு முழுவதும் விடியும் வரை 200 விளக்குகள் எரிந்துள்ளன. ஒரு விளக்குக்கு ஆழாக்கு எண்ணெய் ஆக 200 விளக்குக்கு 25 நாழி எண்ணெய் அளக்கப்பட்டுள்ளது.[31] மேலும் இந்த 25 நாழி எண்ணெய் அளப்பதற்கு 1¼ காசு அளிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து ஒரு காசிற்கு 20 நாழி எண்ணெய் விற்கப்பட்டுள்ளதை அறிகிறோம்.

கார்த்திகை திருநாளன்று இறைவனுக்குப் படைக்கும் உணவுக்கு ஒரு கலம் அரிசி, பருப்பு இரு நாழி, பொரிகறியமுது, புழுக்குக்கறி, மிளகு கறியமுது, புளிங்கறியமுது, தயிர் குறுணி, சர்க்கரை பத்து பலம் ஆகியவை வழங்க வழிவகைச் செய்யப்பட்டுள்ளது.[32]

இப்பொருள்களைக் கொண்டு பருப்புச் சோறு (சாம்பார் சோறு), புளிக் குழம்பு (காரக்குழம்பு), மிளகுச்சோறு, தயிர் சோறு, பொரியல், கூட்டு, சர்க்கரைப் பொங்கல் ஆகியவற்றினைச் செய்து படைத்துள்ளனர் என்பதை விளங்கலாம்.

மார்கழி

மார்கழி மாதம் திருவேகாதசி, துவாதசி ஆகிய தினங்களில் 'திருவாய்மொழி' கேட்க வரும் வைணவர்களுக்கு உணவளிக்கப்பட்டுள்ளது.[33]

திருவேங்கடமாலைத் தீர்த்தமாடல்

திருவேங்கடமாலைத் தீர்த்தமாட பெருங்கூட்டமாய் வந்து ஜனநாதன் திருமண்டபத்தில் உணவு உண்ணும் ஸ்ரீவைஷ்ணவர்கள் நூறு பேர்களுக்கு

உணவளிக்கப்பட்டுள்ளது.[34] அரிசி சோறு, புழுக்குக்கறி, புளித்தக்கறி, இலைக்கறி, மோர், புளிங்கறி ஆகியன பரிமாறப்பட்டுள்ளன. இதில் புழுக்குக்கறி என்பது வேகவைத்த கறி அதாவது கூட்டு; புளித்தகறியொன்றுக்கு புளியுட்பட என்ற சொற்றொடரால் இது புளிக்குழம்பு என்றும்; இலைக்கறி என்பது கீரை; 'புளியங்கறி மோருக்கு' என்ற கல்வெட்டு வரியால் மோர்க்குழம்பு என்றும் கொள்ளலாம்.

இவர்கள் உணவு உண்டபின் அவர்களுக்கு தாம்பூலம் அளித்துள்ளனர். பாக்கு 200, வெற்றிலை எட்டு பற்று, சுண்ணாம்பு ஆகியன தந்துள்ளனர். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகியவை கொண்டு வந்து கொடுக்க இருவர், விறகு வைக்க ஒருவன், இலைக்கறி வைக்க ஒருவன் என இப்பணிகளைச் செய்ய 4 ஆட்களை நியமித்துள்ளனர். இவர்களுக்குக் கூலியாக நெல் கொடுத்துள்ளனர்.[35]

இந்த நூறு வைணவர்கள் மீண்டும் தீர்த்தமாடி வந்தால் அவர்களுக்கு இதே அளவு உணவும், தாம்பூலமும் அளிக்கப்பட்டுள்ளது.

புரட்டாசித் திருவோணத்து திருநாளன்று தீர்த்தமாடி வழிபாடு செய்யவரும் 100 வைணவர்களுக்கும் இதேமாதிரியான உணவளித்துள்ளனர்.

வெண்ணைக் கூத்தர் வழிபாடு

கிருஷ்ணன் என்ற பெயர் தூய தமிழில் 'வெண்ணைக் கூத்தர்' என்று பறை சாற்றுகிறது இவ்வூர்க் கல்வெட்டு.[36] வெண்ணைக் கூத்தருக்கு தினமும் சிறப்பான வழிபாடு நடைபெற்றுள்ளது. கிருஷ்ணன் யாதவ குலத்தில் பிறந்தவன் என்பதால் அவனுக்கு பாலும் வெண்ணையும் பிடித்த உணவாகும். அவன் வெண்ணையைத் திருடி உண்டதாக புராணங்களும் கூறுகின்றன. அவ்வாறு அவனுக்குப் பிடித்த உணவான பாலையும், வெண்ணையையுமே இங்கே வழிபாட்டு நெய்வேத்தியமாக (உணவாக) படைத்துள்ளனர்.

வெண்ணைக் கூத்தர்க்கு சிறுகாலை வழிபாட்டின்போது ஓர் ஆழாக்கு வெண்ணை கொண்டும்; உச்சியம்போது (நடுப்பகல்) வழிபாட்டுக்கு 14 நாழி பால் கொண்டும் படைத்துள்ளனர். இந்த பால் வெண்ணைக்காக அங்காரமங்கலம் என்ற ஊரைச் சேர்ந்த நாகன் சூரியன் என்பவன் பாலுக்காக 90 ஆடுகளும், வெண்ணைக்காக 23 ஆடுகளும் ஆக மொத்தம் 113 ஆடுகள் கொடையாக அளித்துள்ளான்.[37] அந்நாளில் ஆட்டுப்பால், ஆட்டுப்பாலால் வந்த வெண்ணை ஆகியவற்றை மக்கள் உட்கொண்டனர் எனத் தெரியவருகிறது.

புரட்டாசி மாதம் திருவோணம் நாளன்று ஜனநாதன் மண்டபத்தில் வெண்ணைக் கூத்தாழ்வார் திருமேனியை எழுந்தருளுவித்து சிறப்பு வழிபாடுகள் நடத்தியுள்ளனர்.[38] இத்திருநாள் அன்று இறைவனுக்கு அப்பம் வைத்துப் படைத்துள்ளனர். இவ்வப்பம் அரிசி, சற்கரை, நெய், மிளகு, சீரகம், உப்பு போன்ற பொருட்களைக் கொண்டு செய்தளித்துள்ளனர். அப்பம், அரிசி - 5 குறுணி, சற்கரை - 300 பலம், நெய் - 3 நாழி, மிளகு, சீரகம், உப்பு ஆகியவை கொண்டு செய்யப்பட்டுள்ளது. இந்த அப்பம் இனிப்புத்தன்மை உடையது.

ஜென்ம அஷ்டமி

கோகுலத்தில் கிருஷ்ணன் பிறந்த தினமான ஆவணி மாதம் தேய்பிறை எட்டாம் நாளான அஷ்டமி தினத்தை கோகுலாஷ்டமி என்று வைணவர்கள் கொண்டாடி வருகின்றனர். இந்நாளினை 'ஜென்மாஷ்டமி' என்றும் அழைக்கின்றனர். இந்நாளினை திருமுக்கூடல் கல்வெட்டு 'ஜயந்தியஷ்டமி' என்று குறிப்பிடுகிறது.[39] இதுவும் கிருஷ்ணன் பிறந்த தினம் என்ற பொருளையே குறிக்கும். எனவே கிருஷ்ணன் பிறந்த தினம் இக்கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளதை அறிகிறோம். வெண்ணைக் கூத்தாழ்வார் பிறந்த நாள் வழிபாட்டின்போது பெருந்திருவமுது படைக்கப்பட்டது. இப்பெருந் திருவமுதுக்கு அரிசி தூணிப்பதக்கு, பருப்பு இரு நாழி, பொரிக்கறியமுது ஒன்று, புழுக்குக்கறி ஒன்று, மிளகு கறி அமுதுக்கு மிளகு இரண்டு செவிடு, உப்பு, தயிர் 4 நாழி ஆகிய இப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.[40]

ஜயந்தியஷ்டமி அன்று 'அப்பம்' வைத்தும் வழிபாடு நடத்தப்பட்டுள்ளது.[41] அப்பத்துக்கு ஒரு குறுணி இரு நாழி அளவு அரிசி, நெய் உரி அளவு, சற்கரை 20 பலம், மிளகு ஆழாக்கு, சீரகம் இரண்டரை செவிடு ஆகியவை தந்தனர். ஜயந்தியஷ்டமி அன்று வெண்ணைக்கூத்தர் திருவீதி உலா வரும்போது 32 வாழைப்பழங்கள், 4 நாழி தயிர் வைத்துப் படைத்துள்ளனர்.

ஸ்ரீராகவச் சக்ரவத்தி

உச்சிச் சந்தி

அரிசி 4 நாழி, நெய், காய்கறி கொண்டு திருஅமுது இவ்விறைவனுக்குப் படைக்கப்பட்டுள்ளது.[42]

வீரராஜேந்திரன் பிறந்த நாள் சிறப்பு வழிபாடு

'உடையார் ஸ்ரீவீரராஜேந்திரத்தேவர் ஆட்டைத் திருநாள் ஆவணித் திங்கள் திருவாயிலேயத்தில் ஆழ்வார்க்கு'[43] என்ற கல்வெட்டுச் சொற்றொடரால் முதலாம் இராஜேந்திரனின் மகனான வீரராஜேந்திரனின் பிறந்த நாள் ஆவணி மாதம் ஆயில்ய நாள் என்பதனை உறுதி செய்யலாம்.

இம்மன்னனின் பிறந்த நாளன்று இறைவன் வழிபாட்டிற்காக கீழ்க்காணும் பொருட்கள் அளிக்க ஏற்பாடு செய்துள்ளனர்.[44]

1.	திருமஞ்சனத்துக்குத் திருமுளைப்படப்பயிர்	- 1 நாழி
2.	திருமுளைக்கீழ் அட்ட நெல்	- 1 பதக்கு
3.	108 கலசத்திற்கு சுற்றுவதற்கு நூல்	- 1 பலம்
4.	108 கலசத்திற்கு கீழ் அட்ட நெல்	- 1 தூணி, 1 பதக்கு
5.	திருச்சுண்ணம்	-
6.	நெய்	- 4 நாழி
7.	தயிர்	- 4 நாழி
8.	பால்	- 4 நாழி
9.	திருமுளை அட்டப் பாலிகை சூழ கட்டுவதற்கு	- 1 புடவை
10.	கலசத்தின் மேல் சுற்றுவதற்கு	- 1 புடவை
11.	திருமஞ்சனம் பண்ணும் ஆசாரியனுக்கு உடுக்கவும், உத்தரியம் இடுவதற்கு தலா இரண்டாக	- 4 புடவை (4புடவை = 1 காசு)
12.	திருமஞ்சனம் ஆடியருளத் தேன்	- 4 நாழி (½காசு)
13.	குளகுந்தன் மஞ்சள்	- 50 பலம் (¼காசு)
14.	ஸ்நபந திரவியங்கள்	- (½காசு)
15.	திருமஞ்சனம் ஆடிய பின்னர் சாத்த பரிசட்டம் (ஆடை)	- 1 (பட்டு ஆடை) (1 காசு)
16.	ஸ்நபநம் பண்ணும் ஆசாரியனுக்கு தட்சணை	- 1 காசு
17.	'திருவாய்மொழி' பாடும் பத்து வைணவர்களுக்கு பரிசட்டம்	- 10 பரிவட்டம் (பட்டுத்துணி)

இறைவன் திருமேனி திருமஞ்சன மண்டபத்தில் எழுந்தருளிவித்து 108 கலசங்கள் வைத்து நெய், தயிர், பால், தேன், மஞ்சள், திரவியங்கள் ஆகியவற்றினைக் கொண்டு நீராடல் செய்து, பட்டுத்துணி உடுத்தி சிறப்பான முறையில் பூசை நடைபெற்றுள்ளதை அறிகிறோம். அப்போது 'திருவாய்மொழி' பாடியருளப்பட்டுள்ளது.[45]

மன்னன் பிறந்த நாளன்று இறைவனுக்குப் படைக்கப்படும் பெருந்திருவமுது

அரிசி	1 கலம்
பருப்பு	4 நாழி
புழுக்குகறி	1
பொரிக்கறி	1
மிளகு கறி	1
மிளகு	1 ஆழாக்கு
உப்பு	1 நாழி
புழுங்கறியமுதுக்குத் தயிர்	1 குறுணி (இது மோர்க்குழம்பாக இருக்கலாம்)
நெய்	1 நாழி
அடைக்காயமுது காய்	30
வெற்றிலை	3 கட்டு
புளிங்கறிக்குச் சற்கரை	10 பலம்
வாழைப்பழம்	20

மாதவன் தாமயன் பிறந்தநாள் சிறப்பு வழிபாடு

இக்கோயில் திருச்சுற்று மாளிகை, சனநாதன் மண்டபம் ஆகியவற்றினை வைஸ்யன் மாதவன் தாமயன் என்பவன் கட்டியுள்ளான். அவனது பிறந்த நாளான கார்த்திகைத் திங்கள் பூராடத் திருநாளில் திருமஞ்சனம், பெருந்திருவமுது ஆகியவற்றிற்குத் தேவையான பொருட்கள் வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.[46] மேலும் அப்பொழுது பரிசட்டங்களும் (துணிகள்) அளிக்க வழிவகைச் செய்துள்ளனர்.

திருப்பதியம்

இக்கோயிலில் தினமும் திருப்பதியம் பாடுவதற்கு இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.[47] இவர்கள் பாடுவதற்குக் கூலியாக ஒருவருக்கு

நாளொன்றுக்கு பதக்கு அளவு நெல் வீதம் இருவருக்கும் தூணி அளவு நெல்லாகக் கணக்கிட்டு ஆண்டொன்றுக்கு 120 கலம் நெல் கொடுத்துள்ளனர். வாத்திய மாராயன், ஸ்ரீபலி கொட்டுதல் ஆகிய குறிப்புகளின் வழியாக இக்கோயிலில் வழிபாட்டின்போது மேள, தாள, வாத்தியங்கள் முழங்க வழிபாடுகளும், திருவிழாக்களும் சிறப்பாக நடைபெற்றுள்ளதை உணரலாம்.

தினசரி வழிபாடுகளில் சிறுகாலைச் சந்தி, உச்சிச்சந்தி, இரவுச் சந்திகளில் அமுது (உணவு) கொண்டு வழிபாடுகள் நடத்தியுள்ளனர். மாதத் திருவிழாவாக ஒவ்வொரு அமாவாசையன்றும் சிறப்பு வழிபாடுகள் நடந்துள்ளன. மேலும் ஐப்பசி, மாசி மாதங்களில் ஏழு நாட்கள் திருவிழாவும், கிருஷ்ணன் பிறந்த தினமான ஆவணி மாதம் அஷ்டமி நாளன்று ஜயந்தி அஷ்டமி நாள், கார்த்திகைத் திருநாள், புரட்டாசித் திருவோணம், மார்கழி மாத ஏகாதசி மற்றும் துவாதசி ஆகிய நாட்களில் திருவிழாக்கள் மிகச்சிறப்புடன் கொண்டாடப் பட்டுள்ளதை இவ்வூர் கல்வெட்டின் வாயிலாக அறிகிறோம்.

அடிக்குறிப்புகள்

1. தெ.இ.கல்.தொ.30/ பக். 69-93.
2. மேலது 30/102
3. மேலது 30/94,101
4. மேலது 30/102
5. மேலது 30/105 (எபி.இண்டி. XXI/38)
6. மேலது.
7. மேலது 30/102
8. மேலது 30/92,93,91
9. மேலது 30/110
10. மேலது 30/109
11. மேலது 30/105
12. மேலது 30/94
13. மேலது 30/94
14. மேலது 30/101
15. மேலது 30/105
16. மேலது
17. மேலது
18. மேலது 30/98
19. மேலது
20. மேலது
21. மேலது 30/195
22. மேலது 30/98
23. மேலது
24. மேலது
25. மேலது
26. மேலது 30/105
27. மேலது 30/99
28. மேலது 30/105
29. மேலது
30. மேலது
31. மேலது
32. மேலது
33. மேலது
34. மேலது
35. மேலது 30/90
36. மேலது
37. மேலது 30/105
38-46. மேலது

3 வரலாறு காட்டும் தைப்பூசத் திருவிழா

வெ. இராமமூர்த்தி
மண்டல உதவி இயக்குநர், கோயம்புத்தூர்

தைப்பூசத் திருநாள் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. முருகப்பெருமானை வழிபடுவதற்கு இந்நாள் உகந்த நாளாகும்.

தமிழ்நாட்டில் பழனி போன்ற பலத் திருக்கோயில்களில் தைப்பூசம் நடைபெற்றாலும், காவிரி பாய்ந்து வளப்படும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவிடைமருதூர் திருக்கோயிலில் தொன்றுதொட்டு தைப்பூசத் திருநாள் நடைபெற்று வந்ததை வரலாற்றுச் சான்றுகள் எடுத்துரைக்கின்றன. இனி அதனைக் காண்போமா!

திருவிடைமருதூர் குடந்தையிலிருந்து மயிலாடுதுறை செல்லும் சாலையில் திருபுவனத்தை அடுத்து சுமார் 6 கி.மீ. தொலைவில் உள்ளது.

இடைமருதூர் என்பது மத்யார் ஜுனம் என்று வழங்கப்படும். வடக்கே உள்ள ஸ்ரீசைலமும் ஒரு மருதூர். அதற்கு மல்லிகார்ஜுனம் என்று பெயர். தெற்கே திருநெல்வேலி மாவட்டத்தில் திருப்புடை மருதூர் என்று ஒரு தலம் உள்ளது. அதற்கு புடார்ஜுனம் என்று பெயர். வடக்கு, தெற்குக்கு இடையே இத்தலம் இருப்பதால் இதற்கு திருவிடைமருதூர் என்று பெயர் பெறலாயிற்று.

இத்தலத்தில் தைப்பூசத்திருவிழா காலந்தோறும் சிறப்புற நடைபெற்றது என்பதற்கு கல்வெட்டுச் சான்றுகள் உண்டு. கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஆதித்தக் கரிகாலனின் கல்வெட்டு ஒன்று அரிய செய்தியை நமக்குத் தெரிவிக்கின்றது. திருச்சியை அடுத்துள்ள திருவெள்ளறையில் இருந்து மறைக்காடன் எனும் சாக்கைக்கூத்து வல்லானுக்கு, தைப்பூசத் திருவிழாவின்போது மூன்று நாட்களுக்கு சாக்கைக் கூத்தாடவேண்டும் என்றும் அதற்கு நிலம் ஒரு வேலியும் தானமாக அளிக்கப்பட்டது என்பதும் கல்வெட்டால் அறியமுடிகிறது. இக்கல்வெட்டால் தைப்பூசத்திருநாள் சிறப்பாக இத்திருத்தலத்தில் கொண்டாடப்பட்டது என்பது தெரிகிறது. திருவாரூர் தியாகராச சுவாமி கோயில் கல்வெட்டில் சோழ மன்னர் பெயர் குறிப்பிடாவிட்டாலும் காலத்தால் கி.பி. 12-ஆம்

நூற்றாண்டைச் சார்ந்ததாக கொள்ளத்தக்க கல்வெட்டில், வீதிவிடங்கப் பெருமாள் தைப்பூசத்திருவிழாவின் போது தேவாசிரிய மண்டபத்துக்கு எழுந்தருளும்போது அங்கு நடனம் மற்றும் பாட்டுடன் கூடிய கூத்து முதலியவையும் நடைபெற்றது என்பதும், கூத்தாடும் பெருமக்களுக்கு நிலமும், மனையும் அளிக்கப்பட்ட செய்தியையும் காணமுடிகிறது.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விக்கரமசோழன் காலத்தில் கிடைத்த கல்வெட்டில் திருமருதூர் உடையார் கோயில் திருவிடைமருதூர் மடைவிளாகத்தில் சிவலோக நாயகனான கங்கைகொண்ட சோழ அனந்தபாலர் என்பவர் பெருந்திருவாட்டிமடம் என்ற பெயரால் மடத்தினை நிறுவியுள்ளார். இம்மடத்தில் தைப்பூசத் திருநாளில் வருகை தரும் சிவயோகிகள், தவசிகள், ஆண்டார்கள் முதலானோர்க்கு திருவமுது செய்தற்கு இறையிலியாக நிலம் கொடையளித்தமை நமக்குத் தெரியவருகிறது.

தைப்பூசமுடைய நாயனார்

கி.பி. 12-13, ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மூன்றாம் குலோத்துங்கனது காலத்தில் திருவிடைமருதூர்க் கோயில் முதல் திருச்சுற்று மேற்குத் திருமாளிகையில் உடையார் பொருந்திய தைப்பூசமுடைய நாயனார் என்றழைக்கப்பட்ட ஓர் இறைவனை எழுந்தருளுவித்துள்ளார். இத்தைப்பூசமுடைய நாயனார் பூசைக்காக ஏறத்தாழ இரண்டு வேலி நிலமும் திருநாமத்துக்காணியாக வழங்கப்பட்டு, பூசைக்கு மூலதனமாகக் கொள்ளவேண்டும் என்றும் தெளிவுப்படக் கூறப்பட்டுள்ளது. மேலும் திருவாரூர் தியாகராச சுவாமி கோயிலில் உள்ள மூன்றாம் குலோத்துங்கனது கல்வெட்டில் தைப்பூசத் திருநாளில் வீதிவிடங்கப் பெருமான் திருஉலா செய்தருளும்போது சிவனடியார்களின் விண்ணப்பத்திற்கேற்ப வினாயகருக்கு அர்ச்சனைக்காகவும், அமுதுக்காகவும் உடனே இறைவன் பெயரில் நிலம் வாங்க உத்தரவிட்ட செய்தியும் ஒப்புநோக்கத்தக்கதாகும்.

பூசத்துறை

திருவிடைமருதூரில் உள்ள காவிரித்துறைக்கு கல்யாணத்தீர்த்தம் அல்லது பூசத்துறை என்ற பெயர் நிலவியது. அங்குள்ள புஷ்ய மண்டபத்தை அச்சுதப்ப நாயக்கருடைய அமைச்சராக இருந்த கோவிந்த தீட்சதர் கட்டியுள்ளார். (கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டு) தைப்பூசத் திருவிழாவின்போது இங்கு திருத்தேர்

விழா சிறப்பாக நடைபெறும். இறைவன் பூசத்துறைக்கு எழுந்தருளி தீர்த்தம் கொடுப்பதுண்டு. அதுபோது பல ஊர்களிலிருந்தும் பக்தர்கள் இங்கே புனித நீராட கூட்டமாக வருவார்கள். மேலும் உ.வே.சா. அவர்கள் எழுதிய ஸ்ரீமத்யார்ச்சுனமான்மியம் எனும் நூலில் இக்கல்யாணத் தீர்த்தத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் இது எல்லாத் தீர்த்தங்களிலும் மேன்மை கொண்டது என்றும் தைப்பூசத் திருநாளில் இத்தீர்த்தத்தில் நீராடுவது மிகவும் புண்ணியமாகும். தைப்பூசத்தில் இதிற்படிந்தமையாலே பகீரதன் பெறுதற்கரிய ஆகாய கங்கையை பூமியில் வருவித்துத் தன் முன்னோரை நற்கதியடையச் செய்தான் என்று கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

பழனிக்கு நடைபயணம்

தைத்திங்கள் முழுநிலவில் பூச நட்சத்திரத்தில் முருகனை சிறப்பித்து நடைபெறும் தைப்பூசத் திருவிழாவின்போது பக்தர்கள் இறைவனை வேண்டி காவடி எடுத்து நடைப்பயணமாய் பழனிக்குச் செல்கின்ற வழக்கம் காலந்தோறும் நடைபெற்று வருகிறது. அவ்வாறு மக்கள் செல்லும்போது அவர்களுக்கு அன்னதானம் அளிக்கின்ற நிகழ்ச்சியையும், அதற்குரிய மண்டபங்கள், சத்திரங்கள் இருந்ததையும் அறிந்திடும் வண்ணம் அண்மையில் கண்டறியப்பட்ட கல்வெட்டும், செப்பேடும் நமக்குச் சான்றாக உள்ளன. அதில் பழனிக்கு தைப்பூசத்திற்கு நடைபயணமாய் செல்லும் பக்தர்கள் தங்கிக் களைப்பாறவும், உணவு உண்ணவும், சத்திரம் கட்டப்பட்டதாகவும் செய்தியினை நமக்கு அது தருகிறது. தைப்பூச நட்சத்திரத்திலேயே இச்செப்பேடும், கல்வெட்டும் செதுக்கப்பட்டதாக தெரியவருகிறது. கல்வெட்டிலும், செப்பேட்டிலும் ஒரே செய்தியே சொல்லப்பட்டுள்ளது. இது காலத்தால் கி.பி. 1781-ஐச் சார்ந்ததாகும்.

இவ்வாறு காலந்தோறும் தைப்பூசத் திருநாளில் இறைவனுக்கு விழா எடுத்தலும், அதுபோது அன்னதானம் செய்தும் நாடகம், கூத்து நடத்துதலும் அவற்றிற்கு நிலமளித்த செய்தியும் கல்வெட்டால் நாம் அறியமுடிகிறது.

4 வெள்ளிமலை நடுகற்கள்

கோ. சசிகலா
மதுரை

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம், கொட்டாம்பட்டியிலிருந்து வடமேற்கே சுமார் 14 கி.மீ. தொலைவில் உள்ள வெள்ளிமலை கருப்பர் கோயிலில் கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வில்லடியான் சாமி இரண்டு நடுகற்கள் உள்ளன. அவை அதியம் மகன் அரையன் செயிக்கன் என்பவன் போர்க்களத்தில் இறந்தமைக்கு நடுகல் இட்ட செய்தியைத் தருகின்றன.

கல்வெட்டு : 1

1. உச்சி வடக்கில்
2. மங்கலத்தில்
3. அதியம் மக
4. யரையன் கல்
5. லூன்றி தந்தது
6. பட்டான் யிது
7. செயிக்கன் யிவ
8. ரன் மகன் வால
9. ன்

கல்வெட்டு : 2

1. . . ந்த
2.
3. மங்கலத்து
4. லயார்
5. ங்கை
6. கல்லூருக
7. ரை நகதுய
8. நனுப்ப
9. ங்கன் யம
10. தாடை
11. . . .
12. ன் ம
13. கன் வெ
14. ள்ளி (யா)
15. ன்

வெள்ளிமலை கருப்பர் கோயிலில் உள்ள வில்லடியான் சாமி நடுகற்கள்



திருமுக்கூடல் கோயில் மருத்துவக் கல்வெட்டு